# 11th History Lesson 18 Questions in Tamil

## 18] மௌரியருக்குப் பிந்தைய அரசியல் அமைப்பும் சமூகமும்

1. அலெக்சாண்டர் வடமேற்கு இந்தியாவின் மீது படையெடுத்து__________பகுதியைக் கைப்பற்றியதிலிருந்து கிரேக்கர்களுடனான இந்தியத் தொடர்பு தொடங்கியது.

A) குஜராத்

B) லாகூர்

**C) பஞ்சாப்**

D) மேற்கண்ட அனைத்தும்

**விளக்கம்: அலெக்சாண்டர் வடமேற்கு இந்தியாவின் மீது படையெடுத்து (பொ.ஆ.மு. 327–325) பஞ்சாப் பகுதியைக் கைப்பற்றியதிலிருந்து கிரேக்கர்களுடனான இந்தியத் தொடர்பு தொடங்கியது. அவர், தனது படையுடன் மேற்கு நோக்கி திரும்பிச் செல்லத் தொடங்கியபோது, வென்ற பகுதிகளை மாகாண ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் விட்டுச் சென்றார்.**

2. அயல்நாட்டினரிடமிருந்து இந்தியாவை விடுவித்த ஒரு மீட்பராகப் போற்றப்பட்டவர்______________

A) பிந்துசாரர்

**B) சந்திரகுப்தர்**

C) பிம்பிசாரர்

D) அசோகர்

**விளக்கம்: சந்திரகுப்த மௌரியரின் தொடக்ககாலப் படையெடுப்புகளில் ஒன்று, அயல்நாட்டுப் படையெடுப்பாளர்களுக்கு எதிரானதாகும். மேலும், அவர்களைத் தோற்கடித்த (மற்றும் அநேகமாகக் கொன்ற) பின்னர், சந்திரகுப்தர் அயல்நாட்டினரிடமிருந்து இந்தியாவை விடுவித்த ஒரு மீட்பராகப் போற்றப்பட்டார்.**

3. அலெக்சாண்டரின் திறமைமிக்க தளபதிகளுல் ஒருவர்____________

A) மெகஸ்தனிஸ்

B) மாலிக் ஆம்பர்

C) தான்சேன்

**D) செலியுகஸ் நிகேடர்**

**விளக்கம்: அலெக்சாண்டரின் திறமைமிக்க தளபதிகளுல் ஒருவரான செலியுகஸ் நிகேடர், பொ.ஆ.மு. 311க்குப் பிறகு பிரிஜியா (துருக்கி) தொடங்கி சிந்து நதி வரையிலுமான ஒரு மிகப்பெரிய பரப்பில் வெற்றிகரமாக தனது ஆட்சியை நிறுவினார்.**

4. பொ.ஆ.மு. 305 வாக்கில் ____________என்பவர் செலியுகஸை எதிர்த்துப் போரிட்டு அவரைத் தோற்கடித்தார்.

**A) சந்திரகுப்தர்**

B) சமுத்திரகுப்தர்

C) பிந்துசாரர்

D) பிம்பிசாரர்

**விளக்கம்: பொ.ஆ.மு. 305 வாக்கில், சந்திரகுப்தர் செலியுகஸை எதிர்த்துப் போரிட்டு அவரைத் தோற்கடித்தார். இருப்பினும், இது அலெக்சாண்டரின் ஏனைய ஆளுநர்களுக்கு ஏற்பட்டதைப் போன்ற கொடூரமான தோல்வி அல்ல. மாறாக, சந்திரகுப்தர் செலியுகஸீடன் ஓர் அமைதி உடன்படிக்கை செய்துகொண்டார்.**

5. கீழ்க்கண்ட கூற்றுகளை உற்றுநோக்கி தவறானதைக் கண்டறி:

A) சந்திரகுப்தர் செலியுகஸீடன் ஓர் அமைதி உடன்படிக்கை செய்துகொண்டார்.

B) உடன்படிக்கையின்படி சிந்து வரையிலும் தான் வெற்றி கொண்டிருந்த நிலப்பரப்பை செலியுகஸ் ஒப்படைத்தார்.

**C) மேலும் செலியுகஸ் நிலப்பரப்புக்கு பதிலாக 5000 போர் யானைகளைப் பெற்றுக்கொண்டார்.**

D) மேலும் ஒரு திருமண ஒப்பந்தமும் மேற்கொண்டுள்ளார்.

**விளக்கம்: செலியுகஸ் நிலப்பரப்புக்கு பதிலாக 500 போர் யானைகளைப் பெற்றுக்கொண்டார்.**

6. கூற்று 1: கிரேக்க நாட்டுத் தூதுவராக மெகஸ்தனிஸ், மௌரியரின் தலைநகரான காஞ்சிபுரத்திற்கு அனுப்பப்பட்டார்.

கூற்று 2: இந்தியாவிற்கு வந்த முதல் அயல்நாட்டு தூதுவர் மெகஸ்தனிஸ் ஆவார்.

**A) கூற்று 1 தவறு 2 சரி**

B) கூற்று 1 சரி 2 தவறு

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: கிரேக்க நாட்டுத் தூதுவராக மெகஸ்தனிஸ், மௌரியரின் தலைநகரான பாடலிபுத்திரத்துக்கு அனுப்பப்பட்டார். இந்தியாவிற்கு வந்த முதல் அயல்நாட்டு தூதுவர் மெகஸ்தனிஸ் ஆவார்.**

7. சந்திரகுப்தரின் மகன்_______________

A) பிம்பிசாரர்

B) அசோகர்

C) கனிஷ்கர்

**D) பிந்துசாரர்**

**விளக்கம்: சந்திரகுப்தரின் மகன் பிந்துசாரர், மேற்காசியாவிலிருந்த கிரேக்க அரசுகளோடு தொடர்ந்து நட்புறவைப் பேணினார்.**

8. கூற்று 1: எகிப்தின் இரண்டாவது தாலமி தூதர்களை அனுப்பியது பற்றியும் சிரியாவின் ஆன்டியோகஸீடனான பிம்பிசாரரின் கடிதப் போக்குவரத்து குறித்தும் கிரேக்க வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கூற்று 2: அசோகரும் அதே மரபின்படி கிரேக்க அரசுகளுடன் நட்புறவு கொண்டிருந்தார்.

**A) கூற்று 1 தவறு 2 சரி**

B) கூற்று 1 சரி 2 தவறு

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: எகிப்தின் இரண்டாவது தாலமி தூதர்களை அனுப்பியது பற்றியும் சிரியாவின் ஆன்டியோகஸீடனான பிந்துசாரரின் கடிதப் போக்குவரத்து குறித்தும் கிரேக்க வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். அசோகரும் அதே மரபின்படி கிரேக்க அரசுகளுடன் நட்புறவு கொண்டிருந்தார்.**

9. ஐந்து யவன அரசர்களைக் குறிப்பிடும் அசோகரின் பாறைக் கல்வெட்டு ஆணை எண்...................

A) ஆணை எண் 02

B) ஆணை எண் 11

**C) ஆணை எண் 13**

D) ஆணை எண் 18

10. பொருத்துக:

A) இரண்டாவது ஆன்டியோகஸ் தியோஸ் – 1. சைரீன்

B) இரண்டாவது தாலமி பிலடெல்பஸ் – 2. மாசிடோனியா

C) ஆன்டிகோகஸ் கொனடாஸ் – 3. எகிப்து

D) மகஸ் – 4. சிரியா

A) 1 2 4 3

**B) 4 3 2 1**

C) 1 3 2 4

D) 1 4 3 2

**விளக்கம்:**

**A) இரண்டாவது ஆன்டியோகஸ் தியோஸ் – 1. சிரியா**

**B) இரண்டாவது தாலமி பிலடெல்பஸ் – 2. எகிப்து**

**C) ஆன்டிகோகஸ் கொனடாஸ் – 3. மாசிடோனியா**

**D) மகஸ் – 4. சைரீன்**

11. இந்தியா முழுவதும் கிரேக்கர்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் பொதுவான சொல்_______________

A) யவன

B) யுவன

C) யோன

**D) A C இரண்டும்**

**விளக்கம்: இந்தியா முழுவதும் கிரேக்கர்களைக் குறிப்பிட யவன (அல்லது யோன) என்ற பொதுவான சொல் பயன்படுத்தப்பட்டது.**

12. யவன என்ற சொல்____________மொழி சொல்லாகும்.

A) அரபு

B) உருது

**C) பாரசீகம்**

D) இலத்தீன்

**விளக்கம்: யவன அல்லது யோன என்ற சொல்லானது பாரசீக மொழியில் கிரேக்கர்களைக் குறிக்கும் "யயுனா" என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இந்தியாவில் இச்சொல்லானது கலப்பின மக்கள் உட்பட கிரேக்கத்தை பிறப்பிடமாகக் கொண்ட அனைவரையும் மேலும் பொனீசியர்களைக்கூடக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.**

13. பொருத்துக:

A) வடமேற்கு ஆப்கானிஸ்தான் – 1. இலவங்கப்பட்டை இலை

B) விளாமிச்சை வேர்தைலம் – 2. நறுமண தைலம்

C) தாளிசபத்திரி – 3. துருக்கி

D) பிரிஜியா – 4. பாக்ட்ரியா

A) 1 2 4 3

B) 1 3 2 4

C) 1 4 3 2

**D) 4 2 1 3**

**விளக்கம்:**

**A) வடமேற்கு ஆப்கானிஸ்தான் – 1. பாக்ட்ரியா**

**B) விளாமிச்சை வேர்தைலம் – 2. நறுமண தைலம்**

**C) தாளிசபத்திரி – 3. இலவங்கப்பட்டை இலை**

**D) பிரிஜியா – 4. துருக்கி**

14. மௌரியர் காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள்___________

A) தந்தம்

B) ஆமை ஓடுகள்

C) முத்துகள்

**D) மேற்கண்ட அனைத்தும்**

**விளக்கம்: தந்தம், ஆமை ஓடுகள், முத்துகள், அவுரி முதலிய சாயங்கள், விளாமிச்சை வேர்த்தைலம் அல்லது மிச்சை (கங்கைப் பகுதியைச் சேர்ந்த ஒரு நறுமணத் தைலம்), தாளிசபத்திரி (ஒரு வாசனைப் பொருளாகப் பயன்படும் இலவங்கப்பட்டை இலை) மற்றும் அரிய மரங்கள் உள்ளிட்ட பல்வகையான ஆடம்பரப் பொருள்கள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.**

15. கூற்று 1: கிரேக்கர்களின் பண்பாட்டுத் தாக்கம், ராஜகிருகத்திலுள்ள நினைவுச் சின்னங்களிலிருந்து தெரியவருகிறது.

கூற்று 2: மேலும் மௌரியப் பேரரசின் விரிவான நிர்வாக அமைப்புகளுக்குப், பாரசீகர்கள், கிரேக்கர்கள் ஆகியோரின் நிர்வாக அமைப்பு முறைகளே தூண்டுகோலாக இருந்திருக்கும் என்று பல வரலாற்றாளர்கள் கருதுகின்றனர்.

A) கூற்று 1 சரி 2 தவறு

**B) கூற்று 1 தவறு 2 சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: கிரேக்கர்களின் பண்பாட்டுத் தாக்கம், பாடலிபுத்திரத்திலுள்ள நினைவுச் சின்னங்களிலிருந்து தெரியவருகிறது. மேலும் மௌரியப் பேரரசின் விரிவான நிர்வாக அமைப்புகளுக்குப், பாரசீகர்கள், கிரேக்கர்கள் ஆகியோரின் நிர்வாக அமைப்பு முறைகளே தூண்டுகோலாக இருந்திருக்கும் என்று பல வரலாற்றாளர்கள் கருதுகின்றனர்.**

16. வடக்கு ஆஃப்கானிஸ்தான் (பாக்ட்ரியா) தொடங்கி சிரியா வரையிலும் விரிந்திருந்த செலுசியப் பேரரசு, பொ.ஆ.மு__________க்குப் பிறகு வலுவிழந்து சிதையத் தொடங்கியது.

A) பொ.ஆ.மு. 200

**B) பொ.ஆ.மு. 250**

C) பொ.ஆ.மு. 350

D) பொ.ஆ.மு 400

**விளக்கம்: வடக்கு ஆஃப்கானிஸ்தான் (பாக்டீரியா) தொடங்கி சிரியா வரையிலும் விரிந்திருந்த செலுசியப் பேரரசு, பொ.ஆ.மு. க்குப் பிறகு வலுவிழந்து சிதையத் தொடங்கியது.**

17. பாக்ட்ரியாவின் ஆளுநர் டியோடோடஸ்____________யை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து, பாக்ட்ரியாவின் சுதந்திர அரசரானார்.

A) யூதிடெமஸ்

**B) இரண்டாம் ஆன்டியோகஸ்**

C) முதலாம் ஆன்டியோகஸ்

D) டெமிட்ரியஸ்

**விளக்கம்: பாக்ட்ரியாவின் ஆளுநர் டியோடோடஸை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து, பாக்ட்ரியாவின் சுதந்திர அரசரானார். பொ.ஆ.மு. 212இல் இருந்த பாக்டிரிய அரசர், யூதிடெமஸ் ஒரு கிரேக்கராவார்.**

18. நன்கு அறியப்பட்ட முதல் இந்தோ–கிரேக்க அரசர்____________

A) யூதிடெமஸை

B) டெமிட்ரியஸ்

**C) இரண்டாம் டெமிட்ரியஸ்**

D) மேற்கண்ட எவருமில்லை

**விளக்கம்: யூதிடெமஸைத் தொடர்ந்து அவரது மகன் (சுமார் பொ.ஆ.மு. 200 இல்) டெமிட்ரியஸ் ஆட்சிப்பொறுப்புக்கு வந்தார்: மேலும், மற்றொரு டெமிட்ரியஸ், உத்தேசமாக இரண்டாம் டெமிட்ரியஸ்தான் (சுமார் பொ.ஆ.மு. 175), அறியப்பட்ட முதல் இந்தோ–கிரேக்க அரசராவார்.**

19. இந்தோ–கிரேக்க அரசர்களின் ஆட்சியை வேறுபடுத்திக் காட்டுவது_____________

A) கல்வெட்டு சான்றுகள்

B) செப்பேடுகள்

**C) நாணயச்சான்றுகள்**

D) இலக்கியச்சான்றுகள்

**விளக்கம்: இந்தோ–கிரேக்க அரசர்களின் நேர்த்திமிக்க நாணயங்களே அவர்களின் ஆட்சியை வேறுபடுத்திக் காட்டுகிற அம்சமாகும். கிரேக்க வெள்ளி நாணயங்களின் பாணியில் வடிக்கப்பட்டிருந்த அவை, ஒரு பக்கத்தில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் அரசரின் உருவத்தையும், பெயரையும் தாங்கி இருந்தன. இவ்வாறாக அந்த நாணயங்கள், பல வகையான தலைக் கவசங்களோடு சித்திரிக்கப்பட்டுள்ளன.**

20. இந்திய வரலாற்றுக் குறிப்புகளின்படி யவனர்கள் படையெடுத்து வந்ததாகக் குறிப்பிடும் பகுதி__________

A) அயோத்தி

B) சாகேதம்

C) மகதம்

**D) மேற்கண்ட அனைத்தும்**

**விளக்கம்: அக்காலகட்ட இந்திய வரலாற்றுக் குறிப்புகள், அயோத்தி (சாகோதம்), அதனினும் கிழக்கேயுள்ள மகதம் ஆகிய பகுதிகள் மீதும் யவணர்கள் படையெடுத்து வந்ததைக் கூறுகின்றன. இருப்பினும், கிரேக்கர்கள் தமக்கிடையிலான உட்பூசல்களால் குழுப்பத்திலிருந்ததாகத் தெரிவதால், இந்தப் பகுதிகள் எதையும் அவர்கள் கைப்பற்றி தங்கள் வசம் வைத்திருக்கவில்லை.**

21. மௌரிய வம்சத்திற்கு பின்பு ஆட்சிக்கு வந்த வம்சம்____________

A) நந்த வம்சம்

**B) சுங்க வம்சம்**

C) காகதிய வம்சம்

D) டெல்லி சுல்தானியம்

22. கடைசி மௌரிய அரசரை தோற்கடித்து ஆட்சியை பறித்துக்கொண்ட சுங்கப் பேரரசர்_____________

A) வராகமிகிரர்

**B) புஷ்யமித்ரன்**

C) அசோகர்

D) கனிஷ்கர்

**விளக்கம்: கடைசி மௌரிய அரசனுக்குப் பிறகு ஆட்சியைப் பறித்துக்கொண்ட சுங்கப் பேரரசர் புஷ்யமித்ரனுக்கு நிலங்களை விட்டுக் கொடுத்தனர். டெமிட்ரியஸ் இந்தியாவோடு கொண்டிருந்த தொடர்புகளை நாணயச் சான்றுகளும் நிரூபிக்கின்றன.**

23. கூற்று 1: டெமிட்ரியஸ் இந்தியாவோடு கொண்டிருந்த தொடர்புகளை நாணயச் சான்றுகள் நிரூபிக்கின்றன.

கூற்று 2: அவர் வெளியிட்ட சதுர வடிவ இருமொழி நாணயங்களில், முகப்புப் பக்கத்தில் கரோஷ்டியிலும் பின் பக்கத்தில் கிரேக்கத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது.

**A) கூற்று 1 சரி 2 தவறு**

B) கூற்று 1 தவறு 2 சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: டெமிட்ரியஸ் இந்தியாவோடு கொண்டிருந்த தொடர்புகளை நாணயச் சான்றுகள் நிரூபிக்கின்றன. அவர் வெளியிட்ட சதுர வடிவ இருமொழி நாணயங்களில், முகப்புப் பக்கத்தில் கிரேக்கத்திலும் பின் பக்கத்தில் கரோஷ்டியிலும் பொறிக்கப்பட்டுள்ளது.**

24. கீழ்க்கண்டக் கூற்றுகளில் தவறானதைக் கண்டறி:

A) சுமார் பொ.ஆ.மு. 165 வாக்கில் பாக்ட்ரியா (வடக்கு ஆஃப்கானிஸ்தான்) பார்த்தியர் மற்றும் சாகர் வசமானது.

B) பின்னர் மத்திய மற்றும் தெற்கு ஆஃப்கானிஸ்தான் பகுதிகள், வடமேற்கு இந்தியா ஆகிய இடங்களில் யவனர்களின் ஆட்சி தொடர்ந்தது.

C) இருப்பினும் ஆட்சி அதிகாரத்துக்கான மோதல்கள் கிரேக்கர் இடையே நீடித்ததால் குழப்பம் தொடர்ந்தது.

**D) மேலும், முந்நூறுக்கும் அதிகமான அரசர்களின் பெயர்களை அவர்களது நாணயங்களிலிருந்து அடையாளம் காணமுடிகிறது.**

**விளக்கம்: மேலும், முப்பதுக்கும் அதிகமான அரசர்களின் பெயர்களை அவர்களது நாணயங்களிலிருந்து அடையாளம் காணமுடிகிறது.**

25. இந்தோ-கிரேக்க அரசர்களிலேயே நன்கறியப்பட்டவர்____________

A) ஆன்டியோகஸ்

B) டெமிட்ரியஸ்

**C) மினாண்டர்**

D) மேற்கண்ட எவறுமில்லை

**விளக்கம்: இந்தோ-கிரேக்க அரசர்களிலேயே நன்கறியப்பட்டவரான மினாண்டர் (சுமார் பொ.ஆ.மு. 165/145–130), நாட்டின் வட மேற்கில் ஒரு பெரிய பகுதியை ஆட்சி செய்ததாகத் தெரிகிறது. அவரது நாணயங்கள் காபூல், சிந்து நதிகளின் சமவெளிகளிலிருந்து மேற்கு உத்திரப்பிரதேசம் வரையிலுமான விரிந்து பரந்த பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் இது அவரது ஆட்சிப் பரப்பு குறித்த ஒரு நல்ல குறிப்பைத் தருகிறது.**

26. மினாண்டர் பாஞ்சாலம் மற்றும் மதுரா அரசர்களோடு சேர்ந்து__________பகுதியை சூறையாடினார்.

**A) கங்கை**

B) காவேரி

C) கடலோரபகுதி

D) மேற்கண்ட அனைத்தும்

27. கங்கைப் பகுதியைச் சூறையாடிய மினாண்டரை கலிங்க அரசன் காரவேலனால் தடுத்து நிறுத்தமுடியவில்லை எனக் கூறும் கல்வெட்டு____________

A) அலகாபாத்தூண் கல்வெட்டு

B) மெஹ்ரௌலி இரும்புத்தூண் கல்வெட்டு

**C) ஹதிகும்பா கல்வெட்டு**

D) அணியூர் கல்வெட்டு

28. மினாண்டரின் நாணயங்களில் அவரைப் பற்றி கீழ்க்கண்ட எவ்வாறு குறிப்பிடப்படவில்லை.

A) அரசராக

B) இரட்சகராக

C) மீட்பராக

**D) வெற்றி வீரராக**

**விளக்கம்: பாடாலிபுத்திரத்தை மினாண்டர் வெற்றிகரமாகத் தாக்கியபோதிலும் தனது வெற்றியை நிலைப்படுத்திக்கொள்ளாமல் பின்வாங்கினார். அவரது நாணயங்களில் அவர் ஓர் "அரச" ராக, இரட்சகராக, மீட்பராக விவரிக்கப்பட்டுள்ளாரே தவிர ஒரு மாபெரும் வெற்றி வீரனாக விவரிக்கப்படவில்லை.**

29. மினாண்டரின் ஆசிரியர்______________

A) பிந்துசாரர்

B) நாகர்ஜீனசேகர்

**C) நாகசேனர்**

D) அசோகர்

**விளக்கம்: மிலிந்த–பன்ஹா (மிலிந்தவின் வினாக்கள்) எனும் பௌத்தப் பிரதியில்தான் மினாண்டர் ஒரு பெருமைக்குரிய தலைவராக அறியப்படுகிறார். அதில் ஆசிரியர் நாகசேனருடன் பௌத்தம் குறித்த ஒரு கேள்வி–பதில் விவாதத்தில் ஈடுபட்டுள்ளார். அவர் ஒரு பௌத்தராகி, பௌத்தத்தை ஊக்குவித்ததாக நம்பப்படுகிறது.**

30. பாகபத்ர அரசரின் அரசவைக்குத் தூதராக அனுப்பப்பட்டவர்_____________

A) நாகசேனர்

**B) ஹீலியோடோரஸ்**

C) டெமிட்ரியஸ்

D) மினாண்டர்

**விளக்கம்: இந்தோ–கிரேக்க அரசர்களில் நன்கு அறியப்பட்ட மற்றொருவர் ஆன்டியால்சைடஸ் அல்லது ஆன்டியால்கிடாஸ் குறித்த தகவல்களை நாம் அறிவதற்கு இவரது தூதர் ஹீலியோடோரஸ் என்பவரே காரணம். இவர் பாகபத்ர அரசரின் அரசவைக்குத் தூதராக அனுப்பப்பட்டார்.**

31. பாகபத்ர அரசவையில் ஹீலியோடோரஸ் நிறுவிய தூணின் தலைப்பகுதி___________உருவத்தை கொண்டது.

A) கண்டபெருண்டா

**B) கருடன்**

C) அனுமன்

D) முக்குருத்தி

**விளக்கம்: பாகபத்ர அரசவையல் ஹீலியோடோரஸ் நிறுவின் தூணின் தலைப்பகுதி கருட உருவத்தை கொண்டது. கருட–துவஜ என்று அழைக்கப்பட்ட, வைணவக் கடவுள் கிருஷ்ணனுக்கு மரியாதை செய்யும்விதமாக இத்தூண் அமைக்கப்பட்டது.**

32. ஹீலியோடோரஸ் நிறுவிய தூணானது கீழ்க்கண்ட எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது.

A) உத்திரபிரதேசம்

B) ஆந்திரபிரதேசம்

**C) மத்தியபிரதேசம்**

D) தெலுங்கானா

**விளக்கம்: ஹீலியோடோரஸ் நிறுவிய தூணானது மத்தியபிரதேசம், விரிஷாவில் திறந்தவெளி மைதானத்தின் நடுவே அந்தத் தூண் காணப்படுகிறது.**

33. வடமேற்கு இந்தியாவிலிருந்த இந்தோ–கிரேக்க அரசுகளை அகற்றியவர்____________

A) சாகர் (சித்தியன்கள்)

B) பார்த்தியர் (பஹ்லவிகள்)

C) குஷாணர் (யுயசி இனக்குழுக்கள்)

**D) மேற்கண்ட அனைத்தும்**

34. சீனர்கள் பெருஞ்சுவரைக் கட்டியதன் நோக்கம்____________

A) மத்திய ஆசியாவின் கிழக்குப் பகுதியில், நாடோடி இனத்தவரின் சூறையாடல்களைத் தடுக்க

B) சூறையாடல்களிலிருந்து தங்கள் கிராமங்களையும் வேளாண்மையையும் காத்துக்கொள்ள

C) A மட்டும் சரி

**D) A B இரண்டும் சரி**

35. சாகர்களை கிழக்கு ஈரனாலிருந்து வெளியேற்றியவர்___________

A) நாகசேனர்

B) ஹீலியோடோரஸ்

C) டெமிட்ரியஸ்

**D) மித்ரடேட்ஸ்**

**விளக்கம்: கிழக்கு ஈரானிலிருந்து பார்த்திய ஆட்சியாளர் மித்ரடேட்ஸால் (பொ.ஆ.மு. 123–88) வெளியே தள்ளப்பட்ட சாகர்கள், பிறகு வடமேற்கு இந்தியாவை நோக்கித் திரும்பி, இறுதியில் சிந்துவெளிக்கும் சௌராஷ்டிரத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் குடியமர்ந்தனர்.**

36. இந்தியாவின் முதல் சாக ஆட்சியாளர்______________

A) மௌஸ்

B) மொகா

**C) A B இரண்டும்**

D) மேற்கண்ட எவருமில்லை

**விளக்கம்: இந்தியாவின் முதல் சாக ஆட்சியாளர் மௌஸ் அல்லது மொகா ஆவார். காந்தாரத்தைக் கைப்பற்றிய அவர், இந்தோ–கிரேக்க அரசுகளுக்கிடையே ஒரு பிளவை ஏற்படுத்தினார்.**

37. கூற்று 1: சாகர்கள் தங்களின் ஆட்சிப் பகுதிகளை நிர்வகிக்க சத்ரப்களை மாகாண ஆளுநர்களாக நியமித்தனர்.

கூற்று 2: சத்ரபாக்கள் பலரும் தங்களுக்கு மஹாசத்ரபாக்கள் எனப் பட்டம் சூடிக்கொண்டதோடு, நடைமுறையில் சுதந்திர ஆட்சியாளர்களாயினர்.

A) கூற்று 1 சரி 2 தவறு

B) கூற்று 1 தவறு 2 சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

38. ருத்ரதாமனின் வெற்றிகள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு_____________

A) அலகாபாத் கல்வெட்டு

B) மெஹ்ரௌலி இரும்புத்தூண் கல்வெட்டு

**C) ஜீனாகத் கல்வெட்டு**

D) ஹதிகும்பா கல்வெட்டு

**விளக்கம்: புகழ்பெற்ற சாக சத்ரப்களில் ஒருவர்தான் ருத்ரதாமன் (பொ.ஆ.மு. 130–150). புகழ்பெற்ற ஜீனாகத் பாறைக் கல்வெட்டில் (குஜராத்) அவரது வெற்றிகள் போற்றப்பட்டுள்ளன.**

39. இந்தியாவில் சாகர்களை எதிர்த்து அதிக வெற்றி பெற்றவர்_____________

A) ருத்ரமான்

**B) கோண்டோபெர்னெஸ்**

C) கனிஷ்கர்

D) அசோகர்

**விளக்கம்: காபூலை முதலில் கைப்பற்றிய பார்த்திய கோண்டோபெர்னெஸ் என்பவரால் சாகர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். காபூல் பள்ளத்தாக்கைக் குஷாணரிடம் அவர் இழந்தார் என்றாலும் இந்தியாவில் சாகர்களை எதிர்த்து அதிக வெற்றி பெற்றது அவர்தான்.**

40. ஆஃப்கானிஷ்தானை வென்றடக்கிய முதல் குஷாண அரசர்____________

A) முதலாம் காட்பிசெஸ்

B) ஹீலியோடோரஸ்

C) டெமிட்ரியஸ்

**D) குஜிலா காட்பிசெஸ்**

**விளக்கம்: ஆப்கானிஸ்தானை வென்றடக்கிய முதல் குஷாண அரசர், குஜிலா காட்பிசெஸ் ஆவார். அவரைத் தொடர்ந்து வந்தவர் விமா காட்பிசெஸ். இவ்விரு அரசர்களும் குஷாண ஆட்சிப் பகுதியைக் காந்தாரத்துக்கும் பஞ்சாபுக்கும் கிழக்கே மதுரா வரையில் கங்கை யமுனை நதிகளுக்கு இடைப்பட்ட பகுதிக்கும் விரிவுபடுத்தினர்.**

41. குஷாண அரசர்களில் நன்கு அறியப்பட்டவர்______________

A) அசோகர்

**B) கனிஷ்கர்**

C) பிம்பிசாரர்

D) நாகசேனர்

**விளக்கம்: குஷாண அரசர்களில் நன்கு அறியப்பட்டவர் கனிஷ்கர் ஆவார். பொ.ஆ. 78 தொடங்கி பொ.ஆ. 101 அல்லது 102 வரையிலும் ஆட்சி புரிந்ததாகக் கருதப்படுகிறது.**

42. இந்திய நாள்காட்டியில் சக சகாப்தத்தின் தொடக்க ஆண்டு__________

A) பொ.ஆ.மு. 78

**B) பொ.ஆ. 78**

C) பொ.ஆ.மு 68

D) பொ.ஆ. 68

**விளக்கம்: இந்திய நாள்காட்டியில் சக சகாப்தத்தின் தொடக்கமாக பொ.ஆ. 78 கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் கனிஷ்கரின் காலம் பற்றி வரலாற்றாளர்கள் மாறுபடுவதோடு அவரது ஆட்சி, பொ.ஆ. 78க்கும் பொ.ஆ. 144க்கும் இடையில் எப்போதோ தொடங்கியதாகக் கூறப்படுகிறது.**

43. நான்காவது பௌத்த மகாசங்கத்தை கூட்டிய புரவலர்_________ஆவார்.

A) இராஜகுரு

B) அசோகர்

**C) கனிஷ்கர்**

D) பிம்பிசாரர்

**விளக்கம்: ஆர்வமிக்க ஒரு பௌத்த ஆதரவாளரான கனிஷ்கர், நான்காம் பௌத்த ஆதரவாளரான கனிஷ்கர், நான்காம் பௌத்த மகாசங்கத்தை கூட்டிய புரவலர் ஆவார். (மூன்றாம் மகாசங்கம் அசோகரின் ஆட்சி காலத்தில் பாடலிபுத்திரத்தில் நடந்தது.) இக்காலத்தில் மஹாயானம் பௌத்தம் மேலாதிக்கம் செலுத்தும் பிரிவாகியிருந்தது. பொளத்தத்தைப் போதிப்பதற்காகச் சீனாவுக்கு அனுப்பப்பட்ட மதப் பரப்புநர்களைக் கனிஷ்கர் ஆதரித்தார்.**

44. மூன்றாவது பொளத்த மகாசங்கத்தை கூட்டிய புரவலர்___________ஆவார்.

A) இராஜகுரு

**B) அசோகர்**

C) கனிஷ்கர்

D) பிம்பிசாரர்

45. பொளத்தத்தைப் போதிப்பதற்காகச் சீனாவுக்கு அனுப்பப்பட்ட மதப் பரப்புநர்களைக் ஆதரித்தவர்____________

A) அசோகர்

B) பிந்துசாரர்

**C) கனிஷ்கர்**

D) இராஜகுரு

46. குஷாணர்களின் நாணயங்கள் குஷாண ஆட்சியாளர்களை கீழ்க்கண்ட எவ்வாறு குறிப்பிடுகிறது.

A) அரசர்களின் அரசர்

B) ஸீசர்

C) அகிலத்தை ஆள்பவன்

**D) மேற்கண்ட அனைத்தும்**

**விளக்கம்: குஷாணரின் நாணயங்கள் உயர்ந்த தரமுள்ளவை என்பதோடு ரோமானிய நாணயங்களின் எடைத் தரங்களுக்கு ஒத்திருந்தன. அவை குஷாண ஆட்சியாளர்களை "அரசர்களின் அரசர்", "ஸீசர்", "அகிலத்தை ஆள்பவன்" என்பன போன்ற பிற பட்டப் பெயர்களால் குறிப்பிடுகின்றன.**

47. கனிஷ்கர்____________பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

A) கிழக்கு ஆசியா

B) தென்கிழக்கு ஆசியா

C) மேற்கு ஆசியா

**D) மத்திய ஆசியா**

**விளக்கம்: கனிஷ்கரின் நாணயங்களும் கூடவே மதுரா அருகே காணப்படும் அவரது சிலையும் அவர் மத்திய ஆசியாவைப் பிறப்பிடமாக கொண்டவர் என்பதற்குச் சான்று கூறும் விதத்தில், வார்பூட்டிய அங்கி, நீண்ட மேலங்கி, காலணிகளும் அணிந்தவராகக் காணப்படுகிறார்.**

48. சீனாவும் பாகிஸ்தானும் இணைந்த மேற்கொண்ட "காரகோரம் நெடுஞ்சாலைத் திட்டம்" நிறைவு பெற்ற ஆண்டு.

A) 1969

**B) 1979**

C) 1989

D) 1999

**விளக்கம்: சீனாவும் பாகிஸ்தானும் இணைந்து மேற்கொண்ட, 1979ஆம் ஆண்டு நிறைவு பெற்ற, காரகோரம் நெடுஞ்சாலைத் திட்டம், தொல்லியலாளர்களுக்கும் வரலாற்றாளர்களுக்கும் பெரும் பலன்களை அளித்துள்ளது.**

49. கூற்று 1: ஹீஸ்னா பாறைக் கல்வெட்டு முதல் இரண்டு காட்பிசெசுகள் குறித்து குறிப்பிடுகிறது.

கூற்று 2: கனிஷ்கரை தேவபுத்ர (கடவுள் மகன்) என்றும் மஹாராஜா என்றும் குறிப்பிடும் கல்வெட்டு ஹதிகும்பா பாறைக் கல்வெட்டாகும்.

**A) கூற்று 1 சரி 2 தவறு**

B) கூற்று 1 தவறு 2 சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: ஹீஸ்னா பாறைக் கல்வெட்டு முதல் இரண்டு காட்பிசெசுகள் குறித்து குறிப்பிடுகிறது. கனிஷ்கரை தேவபுத்ர (கடவுள் மகன்) என்றும் மஹாராஜா என்றும் குறிப்பிடும் கல்வெட்டு ஹீஸ்னா பாறைக் கல்வெட்டாகும்.**

50. காரகோரம் நெடுஞ்சாலைக் குறித்தக் கருத்துகளில் சரியானதைக் கண்டறி:

1) காரகோரம் நெடுஞ்சாலை நெடுகிலும் கண்டெடுக்கப்பட்ட கலைப் பொருள்கள், பௌத்தத்தைப் பரப்புகிற தங்களின் பணிக்காகப் பௌத்தத் துறவிகள் சீனாவுக்குச் சென்றது இச்சாலையில்தான் என்பதை உறுதிப்படுத்துகிறது.

2) பௌத்த மதத் துறவிகளைப் பின்பற்றி வணிகர்களும் இச்சாலை வழியாகச் சென்றுள்ளனர். இதனால் சீனாவிலிருந்து பட்டு, மேற்காசிய நாடுகளிலிருந்து குதிரைகள் ஆகியனவற்றை இந்தியா இறக்குமதி செய்ய இச்சாலை ஒரு முக்கிய வணிக வழியாக மாறியது.

A) 1 சரி 2 தவறு

B) 1 தவறு 2 சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

51. கீழ்க்கண்டக் கூற்றுகளில் பொருந்தாததைக் கண்டறி:

**A) ஹீனயானம் பௌத்த மதம் புத்தரை மனித வடிவில் சித்தரிப்பதை அனுமதித்தது.**

B) சிலை வடிப்புக் கலையில் கிரேக்க தாக்கத்தின் காரணமாக இந்திய–கிரேக்கக் கூறுகள் ஒன்றிணைந்து புதிய முறை உருவானது.

C) இது பொதுவாக காந்தாரக்கலை என்றழைக்கப்படுகிறது.

D) தட்சசீலத்திலும் வட–மேற்குப் பகுதிகளிலும் செதுக்கப்பட்ட புத்தரின் சிலைகள், கிரேக்க மரபால் ஊக்கம் பெற்று, கண்ணியமான ஆடைகளில், தேவதூதர்களாலும் இலைகளாலும் சூழப்பட்டுள்ளதாக அவரைக் காட்டுகின்றன.

**விளக்கம்: மஹாயானம் பௌத்த மதம் புத்தரை மனித வடிவில் சித்தரிப்பதை அனுமதித்தது.**

52. கீழ்க்கண்டக் கூற்றுகளைக் கவனித்து பொருந்தாததைக் கண்டறி:

A) அஜந்தா குகைகள் முதல் மும்பையில் கன்ஹேரி குகைகள் வரை பௌத்தர்கள் மேற்கிந்தியாவிலுள்ள குன்றுகளில் பாறைகளைக் குடைந்து குகைகளை அமைத்தனர்.

B) விகாரங்களையும் சைத்தன்யங்களையும் கொண்டிருந்த அவை பௌத்த மத மையங்களாக செயல்பட்டன.

**C) இவ்வாறான குகைகள் ஹீனயான மரபின் ஒரு பகுதியாக இந்தக் குகைகளில் புத்தரின் பெரிய அளவு சிலைகள் செதுக்கப்பட்டன.**

D) மேலும் பிந்தைய நூற்றாண்டுகளில் அவை, அஜந்தா குகைகளில் காணப்படுவதைப் போல அசாதாரண அழகுள்ள சுவர்ச் சித்திரங்களால் மேலும் ஒப்பனை செய்யப்பட்டன.

**விளக்கம்: இவ்வாறான குகைகள் மஹாயான மரபின் ஒரு பகுதியாக இந்தக் குகைகளில் புத்தரின் பெரிய அளவு சிலைகள் செதுக்கப்பட்டன.**

53. கனிஷ்கர் கீழ்க்கண்ட யாருடைய புரவலராகத் திகழ்ந்தார்.

A) நாகார்ஜீனர்

B) அஸ்வகோஷர்

C) பார்ஸ்வர்

**D) மேற்கண்ட அனைவரும்**

**விளக்கம்: பௌத்த ஆசான் நாகார்ஜீனர், பௌத்த தத்துவஞானிகள் அஸ்வகோஷர், பார்ஸ்வர், வசுமித்திரர், போன்றோரின் புரவலராகப் பேரரசர் கனிஷ்கர் திகழ்ந்தார்.**

54. பொருத்துக:

A) அஸ்வகோஷர் – 1. அர்த்தசாஸ்திரம்

B) மெகஸ்தனிஸ் – 2. காமசூத்ரம்

C) வாத்சயாயனார் – 3. இன்டிகா

D) கௌடில்யர் – 4. புத்தசரிதம்

A) 1 2 4 3

B) 1 3 2 4

C) 1 4 3 2

**D) 4 3 2 1**

**விளக்கம்:**

**A) அஸ்வகோஷர் – 1. புத்தசரிதம்**

**B) மெகஷ்தனிஸ் – 2. இன்டிகா**

**C) வாத்சயாயனார் – 3. காமசூத்ரம்**

**D) கௌடில்யர் – 4. அர்த்தசாஸ்திரம்**

55. சரிபுத்ரப்ரகரண என்ற சமஸ்கிருத நாடகத்தின் ஆசிரியர்_____________

**A) அஸ்வகோஷர்**

B) மெகஸ்தனிஸ்

C) வாத்சாயாயனார்

D) கௌடில்யர்.

**விளக்கம்: அஸ்வகோஷர் அவரது புத்தசரிதம் நூலுக்காகப் புகழ்பெற்றவர் என்பதோடு ஒன்பது காட்சிகளில் அமைந்த சரிபுத்ரகரண என்ற முதல் சம்ஸ்சிருத நாடகத்தின் ஆசிரியர் என்பதற்காகவும் போற்றப்படுகிறார்.**

56. காந்தாரக்கலைப் பற்றியக் கூற்றுகளில் தவறானதைக் கண்டறி:

A) பண்பாட்டுத் தாக்கங்கள் சங்கமிக்குமிடத்தில் அமைந்துள்ள காந்தாரம் கிரேக்க மற்றும் ரோமானியப் பண்பாடுகளின் செல்வாக்குக்கும் உட்பட்டது.

**B) பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டில் காந்தாரக்கலை வளர்ச்சியடைந்தன.**

C) குஷாணப் பேரரசுக் காலத்தில், ரோமுடனான அதன் தொடர்புகளினால் ரோமானியக் கலை நுட்பங்கள் இந்தியக் கலை நுட்பங்களோடு கலந்து, வட மேற்கு இந்தியா முழுவதும் பின்பற்றப்பட்டன.

D) ஆன்ம நிலையில்–தியானத்திலிருக்கிற புத்தரைச் சித்தரித்ததற்காகக் காந்தாரக் கலை புகழ்பெற்றது.

**விளக்கம்: பொ.ஆ. முதலாம் நூற்றாண்டில் காந்தாரக்கலை வளர்ச்சியடைந்தன.**

57. நவீன ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய தக்காணப் பகுதியில் சாதவாகன ஆட்சி நிறுவப்பட்டக் காலம்.

**A) பொ.ஆ. முதல் நூற்றாண்டு**

B) பொ.ஆ. இரண்டுhம் நூற்றாண்டு

C) பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு

D) பொ.ஆ. நான்காம் நூற்றாண்டு

58. சரியாக பொருந்தாத இணையைக் கண்டறி:

A) பாண்டியர் – மதுரை

B) சேரர் – வஞ்சி

C) சோழர் – உறையூர்

**D) பல்லவர் – திருவள்ளுர்**

**விளக்கம்:**

**A) பாண்டியர் – மதுரை**

**B) சேரர் – வஞ்சி**

**C) சோழர் – உறையூர்**

**D) பல்லவர் – காஞ்சிபுரம்**

59. மூவேந்தர்களை தனது பேரரசின் எல்லையிலிருந்த அரசுகள் என்று குறிப்பிடும் அசோகரின் கல்வெட்டு_____________

A) 13 வது பாறைக் கல்வெட்டு

**B) 2 வது பாறைக் கல்வெட்டு**

C) 7 வது பாறைக் கல்வெட்டு

D) மேற்கண்ட எதுவுமில்லை

60. சங்க இலக்கியத்தின் காலம்____________

A) கி.மு. 3 முதல் கி.பி. 6 வரை

B) கி.மு. 3 முதல் கி.மு. 9 வரை

**C) கி.மு. 3 முதல் கி.பி. 3 வரை**

D) கி.மு. 3 முதல் கி.பி. 5 வரை

**விளக்கம்: பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியைச் சேர்ந்த, சங்க இலக்கியம் என்று அறியப்படுகிற தமிழ் இலக்கியங்களின் தொகுப்பிலிருந்து தமிழ்ப் பகுதி குறித்த விரிவான தகவல்களை பெறமுடிகிறது.**

61. இந்தியக் கடற்கரையிலிருந்த துறைமுகங்கள், அங்கு நிகழ்ந்த வணிகம் ஆகிய தகவல்களை வழங்கும் மிகவும் நம்பகத்தன்மை கொண்ட வரலாற்று சான்றான "எரித்ரியக் கடலின் பெரிப்ளஸ்" கீழ்க்கண்ட எந்த நூற்றாண்டைச் சார்ந்தது.

**A) பொ.ஆ. முதல் நூற்றாண்டு**

B) பொ.ஆ. இரண்டுhம் நூற்றாண்டு

C) பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு

D) பொ.ஆ. நான்காம் நூற்றாண்டு

62. கூற்று 1: பொ.ஆ.மு. முதல் நூற்றாண்டின் முடிவில், கிரேக்க அரசுகளை அகற்றிவிட்டு மத்திய தரைக் கடல் உலகின் வல்லரசாக ரோம் மேலெழுந்தது.

கூற்று 2: மேலும் ரோமானியக் குடியரசு, பொ.ஆ.மு. 27இல் பேரரசர் அகஸ்டஸின் கீழ் ஒரு பேரரசு ஆயிற்று.

A) கூற்று 1 சரி 2 தவறு

**B) கூற்று 1 தவறு 2 சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: பொ.ஆ.மு. கடைசி நூற்றாண்டின் முடிவில், கிரேக்க அரசுகளை அகற்றிவிட்டு மத்திய தரைக் கடல் உலகின் வல்லரசாக ரோம் மேலெழுந்தது. மேலும் ரோமானியக் குடியரசு, பொ.ஆ.மு. 27இல் பேரரசர் அகஸ்டஸின் கீழ் ஒரு பேரரசு ஆயிற்று.**

63. கீழ்க்கண்டக்கூற்றுகளில் சரியானதைக் கண்டறி:

1) பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டில், எகிப்தியக் கடலோடி ஹிப்பாலஸ் என்பவர் அரபிக் கடலில் வீசும் பருவக்காற்றுகளின் காலமுறை இயல்புகளைக் கண்டறிந்தார்.

2) அது வரை, இந்தியாவுக்கும் மத்திய தரைக் கடலுக்கும் இடையிலான கடல் வணிகம், அரபியர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது.

3) மேலும் ரோமாபுரிக்கு பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்ட இலவங்கப்பட்டை போன்ற பொருள்களின் உற்பத்தி மையங்கள் தென்னிந்தியாவில் எங்கிருந்தன என்பதைப் பற்றிய அறிவை அரபியர்களே ஏகபோகமாக கொண்டிருந்தனர்.

A) 1 2 மட்டும் சரி

**B) 2 3 மட்டும் சரி**

C) 1 மட்டும் சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: பொ.ஆ. முதல் நூற்றாண்டில், எகிப்தியக் கடலோடி ஹிப்பாலஸ் என்பவர் அரபிக் கடலில் வீசும் பருவக்காற்றுகளின் காலமுறை இயல்புகளைக் கண்டறிந்தார்.**

64. "இந்தோ ரோமானிய வணிக நிலையம்" என்றழைக்கப்பட்ட இடம்___________

A) ஆதிச்சநல்லூர்

B) கொடுமணல்

C) கீழடி

**D) அரிக்கிமேடு**

**விளக்கம்: ரோம் ஒரு குடியரசாக இருந்தபோதே ரோமுக்கும் தமிழ் நாட்டுக்கும் இடயிலான வணிகம் செழித்திருந்தது. அக்காலத்தைச் சேர்ந்த ரோமானிய நாணயங்களும் கலைப் பொருள்களும், "இந்தோ–ரோமானிய வணிக நிலையம்" என்று கூறப்பட்டுவந்த, புதுச்சேரிக்கு அருகேயுள்ள அரிக்கமேட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.**

65. மேற்குக் கரையிலிருந்து, ரோமானிய வணிகர்கள் நிலவழியே___________கணவாயைக் கடந்து கிழக்கேயுள்ள உற்பத்தி மையங்களுக்கு வந்தன.

**A) பாலக்காடு கணவாய்**

B) செங்கோட்டை கணவாய்

C) கைபர் கணவாய்

D) போலன் கணவாய்

66. பொருத்துக:

| | | |
|---|---|---|
| A) கொடுமணல் | – | 1. புதுச்சேரி |
| B) படியூர் | – | 2. வேலூர் |
| C) வாணியம்பாடி | – | 3. திருப்பூர் |
| D) அரிக்கிமேடு | – | 4. ஈரோடு |

| | | | | |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 4 | 3 |
| B) | 1 | 3 | 2 | 4 |
| C) | 1 | 4 | 3 | 2 |
| **D)** | **4** | **3** | **2** | **1** |

**விளக்கம்:**

| | | |
|---|---|---|
| **A) கொடுமணல்** | **–** | **1. ஈரோடு** |
| **B) படியூர்** | **–** | **2. திருப்பூர்** |
| **C) வாணியம்பாடி** | **–** | **3. வேலூர்** |
| **D) அரிக்கிமேடு** | **–** | **4. புதுச்சேரி** |

67. ரோம் நாட்டில் அதிக தேவையில் இருந்த ஒரு நவரத்தினக் கல்லான கோமேதகம் கிடைக்கிற சுரங்கங்கள் அமைந்துள்ள இடம்__________

A) ஈரோடு

B) திருப்பூர்

C) வேலூர்

**D) மேற்கண்ட அனைத்தும்**

**விளக்கம்: கொடுமணல் (ஈரோடு), படியூர்(திருப்பூர்), வாணியம்பாடி(வேலூர்) ஆகிய இடங்களில் ரோம் நாட்டில் அதிக தேவையில் இருந்த ஒரு நவரத்தினக் கல்லான கோமேதகம் கிடைக்கிற சுரங்கங்களிருந்தன.**

68. __________யில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்பும் எஃகும் ரோமாபுரிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

A) படியூர்

B) கொடுமணல்

**C) சென்னிமலை**

D) வாணியம்பாடி

**விளக்கம்: ஈரோடு அருகேயுள்ள சென்னிமலையில், உற்பத்தி செய்யப்பட்ட இரும்பும் எஃகும் ரோமாபுரிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. (உருக்காலை மற்றும் உருக்கு எச்சங்கள் இங்கே அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.)**

69. முற்பட்டக் காலத்தில் ரோமானிய நாணயங்கள் அதிகளவு காணப்பட்ட இடம்_____________

A) கோயம்பத்தூர்

B) ஈரோடு

C) சேலம்

**D) மேற்கண்ட அனைத்தும்**

70. கூற்று 1: பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டின் முடிவில், ரோமானியக் கப்பல்கள் தமிழகத்தின் கோரமண்டல் எனப்படும் கிழக்குக் கடற்கரையிலுள்ள துறைமுகங்களுக்குப் பணயிக்கத் தொடங்கின.

கூற்று 2: மேலும் இந்தத் துறைமுகங்களில் பலவும் பெரிப்பிளஸ் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

A) இரண்டும் சரி

B) கூற்று 1 சரி 2 தவறு

C) இரண்டும் தவறு

**D) கூற்று 1 தவறு 2 சரி**

**விளக்கம்: பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டின் முடிவில், ரோமானியக் கப்பல்கள் தமிழகத்தின் கோரமண்டல் எனப்படும் கிழக்குக் கடற்கரையிலுள்ள துறைமுகங்களுக்குப் பணயிக்கத் தொடங்கின. மேலும் இந்தத் துறைமுகங்களில் பலவும் பெரிப்பிளஸ் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

71. பொருந்தாத இணையைக் கண்டறி:

A) நவுரா – கண்ணனூர்

B) தொண்டி – பொன்னானி

**C) படியூர் – வேலூர்**

D) சோழமண்டலம் – கோரமண்டல்

**விளக்கம்:**

**A) நவுரா – கண்ணனூர்**

**B) தொண்டி – பொன்னானி**

**C) படியூர் – திருப்பூர்**

**D) சோழமண்டலம் – கோரமண்டல்**

72. கூற்று 1: முசிறி அல்லது முசிரிஸ் என்பது தெற்கே அமைந்திருந்த ஒரு முக்கியத் துறைமுகமாகும்.

கூற்று 2: இது, பாரம்பரியாமாக் கொடுமணல் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

A) இரண்டும் சரி

**B) கூற்று 1 சரி 2 தவறு**

C) இரண்டும் தவறு

D) கூற்று 1 தவறு 2 சரி

**விளக்கம்: முசிறி அல்லது முசிரிஸ் என்பது மேலும் தெற்கே அமைந்திருந்த ஒரு முக்கியத் துறைமுகமாகும். இது, பாரம்பரியாமாக் கொடுங்களுர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.**

73. கீழ்க்கண்டக் கூற்றுகளில் பொருந்தாததைக் கண்டறி:

**A) அநேகமாக கிழக்குக் கடற்கரையில் இருந்த துறைமுகங்களில் மிகவும் பரபரப்பான வணிக மையம் முசிறியாகும்.**

B) முசிறியைச் சேர்ந்த ஒரு வணிகருக்கும் அலெக்சாண்ட்ரியாவைச் சேர்ந்த ஒரு வணிகருக்கும் இடையிலான வணிக ஒப்பந்தம் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

C) கோரைப்புல் தாளில் எழுதப்பட்ட அந்த ஒப்பந்தம், தனி வணிகர்களாலும்கூடப் பெருமளவிலான சரக்குகள் கப்பலில் கொண்டு செல்லப்பட்டதைச் சுட்டிக்காட்டுகிறது.

D) சங்கப் பாடல்களின்படி முசிறி நகரம் இரண்டு வணிகச் சுற்றுகளின் மையமாக இருந்துள்ளது.

**விளக்கம்: அநேகமாக மேற்குக் கடற்கரையில் இருந்த துறைமுகங்களில் மிகவும் பரபரப்பான வணிக மையம் முசிறியாகும்.**

74. கூற்று 1: நாட்டின் உள்பகுதிகளிலிருந்து அரிசியை ஏற்றிவந்த படகுகள், திரும்பிச்செல்கையில் மீன்களை ஏற்றிச் சென்றன. இது, அடிப்படையான நுகர்வுப் பொருள்களின் வணிகத்தில் பண்டமாற்று முறை பின்பற்றப்பட்டதைச் சுட்டுகிறது.

கூற்று 2: அதே நேரத்தில், சந்தைக்குக் கொண்டுவரப்பட்ட கருமிளகு மூட்டைகள், கப்பலில் வந்த தங்கத்திற்குப் பண்டமாற்று செய்துகொள்ளப்பட்டு, பின் அத்தங்கம் படகுகளில் கடற்கரைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

**A) இரண்டும் சரி**

B) கூற்று 1 சரி 2 தவறு

C) இரண்டும் தவறு

D) கூற்று 1 தவறு 2 சரி

75. இந்தியாவிலிருந்து ரோமுக்குச் சென்ற கப்பல்கள்___________யைச் சுமந்து சென்றன.

A) மிளகு

B) முத்துகள்

C) தந்தம்

**D) மேற்கண்ட அனைத்தும்**

**விளக்கம்: இந்தியாவிலிருந்து ரோமுக்குச் சென்ற கப்பல்கள், மிளகு. அதிக அளவில் முத்துகள், தந்தம், பட்டுத்துணி, செல்வமிக்க ரோமானியர்களிடையே தனிப் பயன்பாட்டுக்கென மிகதியாக தேவைப்பட்ட ஒருவகை நறுமணத் தைலமான கங்கைப் பகுதியிலிருந்து தருவிக்கப்பட்ட விளாமிச்சை வேர்த் தைலம், இலவங்கப் பட்டை மர இலையான தாளிசபத்திரி எனும் நறுமணப் பொருள், நீலக்கல், கோமேதகம், வைரம், ஆமை ஓடு ஆகியவற்றைச் சுமந்து சென்றன.**

76. கூற்று 1: ரோமானியக் கப்பல்கள் சோழமண்டலக் கடற்கரையுடன் வணிகத்தைத் தொடங்கியதும், இந்தப் பகுதியின் நேர்த்தியான பருத்தித் துணிகளும்கூட முக்கியமான ஏற்றுமதிப் பண்டமாயின.

கூற்று 2: ரோமிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முக்கியமான பொருள்கள்: நாணயங்கள், புஷ்பராகக் கல், அஞ்சனம், பவழம், கச்சா கண்ணாடி, தாமிரம், தகரம், ஈயம், மது வகைகள் ஆகியனவாகும்.

**A) இரண்டும் சரி**

B) கூற்று 1 சரி 2 தவறு

C) இரண்டும் தவறு

D) கூற்று 1 தவறு 2 சரி

77. கூற்று 1: தமிழ்ப் பகுதியிலிருந்து ஏற்றுமதியான பொருள்களின் மதிப்பு, ரோமிலிருந்து இறக்குமதியான பொருள்களின் மதிப்பைக் காட்டிலும் மிக அதிகம் ஆகும்.

கூற்று 2: மேலும் பொ.ஆ. முதல் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில், பேரரசர் டைபீரியஸ் ஆட்சியின் போது வணிகத்தின் அளவு உச்சத்தை எட்டியது.

A) கூற்று 1 சரி 2 தவறு

B) இரண்டும் தவறு

C) கூற்று 1 தவறு 2 சரி

**D) இரண்டும் சரி**

78. ஒவ்வோராண்டும் இந்தியாவுடனான வணிகத்தால் ரோமாபுரிக்கு____________மில்லியன் செஸ்டர்செஸ் இழப்பு ஏற்பட்டது.

A) 35 மில்லியன் செஸ்டார்ஸ்

B) 45 மில்லியன் செஸ்டார்ஸ்

**C) 55 மில்லியன் செஸ்டார்ஸ்**

D) 65 மில்லியன் செஸ்டார்ஸ்

**விளக்கம்: ஒவ்வோராண்டும் இந்தியாவுடனான வணிகத்தால் ரோமாபுரிக்கு 55 மில்லியன் செஸ்டர்செஸ் (பண்டைய ரோமானியப் பணம்) இழப்பு ஏற்பட்டது என்றொரு புகார் எழுந்தது.**

79. _________என்பவர் ரோம் நாட்டுச் செல்வ வகுப்பினரின் ஆடம்பரப் பொருள் நுகர்வைத் தடை செய்து சட்டமியற்றினார்.

A) டைபீரியஸ்

**B) வெஸ்பேசியன்**

C) பெரிப்லஸ்

D) மேற்கண்ட எவருமில்லை

**விளக்கம்: பேரரசர் வெஸ்பேசியன் ரோம் நாட்டுச் செல்வ வகுப்பினரின் ஆடம்பரப் பொருள் நுகர்வைத் தடை செய்து சட்டமியற்றினார். அதையடுத்து இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை ஒப்பீட்டளவில் குறைந்த மதிப்புடைய பண்டங்களாக பருத்தித் துணிகள், மிளகு ஆகியவை மட்டுமே என்றாயிற்று.**

80. சோழமண்டலக் கடற்கரையில் இருந்த மிக முக்கியமான துறைமுகம்_____________

A) வஞ்சி

B) தொண்டி

**C) புகார்**

D) மதுரை

**விளக்கம்: சோழமண்டலக் கடற்கரையில் இருந்த மிக முக்கியமான துறைமுகம் புகார்(பூம்பகார்) ஆகும். இங்கே யவன வணிகர்கள், துறைமுகப் பகுதியில் குறிப்பாக அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த குடியிருப்புப் பகுதிகளில் வாழ்ந்தனர்.**

81. கீழ்க்கண்டவற்றுள் "யவணர" பற்றிய குறிப்புகளுல் பொருந்தாததைக் கண்டறி:

A) மதுரையிலிருந்து கோட்டை, பெரிய வாள்கள் தாங்கிய யவனர்களால் பாதுகாக்கப்பட்டது.

**B) அநேகமாக யவணர்களின் கண்கள் மஞ்சள் அல்லது நீல நிறத்தில் இருந்ததால் வன்கண் யவனர் எனச் சுட்டப்பட்டுள்ளனர்.**

C) யவணர் என்ற சொல் கிழக்கிந்திய மத்திய தரைக் கடல் பகுதிகளிலிருந்து வருகை தந்த அனைவரையும் குறிக்கிற ஒரு பொதுப் பெயராகிப்போனது.

D) யவணர் என்ற சொல்லுக்கு கிரேக்கர்கள் என்ற பொருளாகும்.

**விளக்கம்: அநேகமாக யவணர்களின் கண்கள் சாம்பல் அல்லது நீல நிறத்தில் இருந்ததால் வன்கண் யவனர் எனச் சுட்டப்பட்டுள்ளனர்.**

82. _________ஆற்றுப்படுகையில் பெரிய அளவுகளில் சேர நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன.

A) நர்மதை

B) காவிரி

**C) அமராவதி**

D) சிந்து

**விளக்கம்: அமராவதி ஆற்றுப் படுகையில் பெரிய அளவுகளில் சேர நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. வட இந்தியாவில் மிகப் பெரிய அளவுகளில் இந்தோ–கிரேக்க, குஷாண நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளமை, பணமயமாக்கத்தின் அளவு குறித்து அதே போன்ற ஒரு முடிவுக்கே இட்டுச்செல்கிறது.**

83. சரியான முறைப்படி வரிசைப்படுத்துக:

A) சாகர் – குஷாணர் – பார்த்தியர்

B) குஷாணர் – பார்த்தியர் – சாகர்

**C) சாகர் – பார்த்தியர் – குஷாணர்**

D) குஷாணர் – சாகர் – பார்த்தியர்

84. காந்தாரக்கலை கீழ்க்கண்ட யாருடைய காலத்தில் வளர்ச்சிப்பெற்றது.

A) பிம்பிசாரர்

B) அசோகர்

C) இராஜகுரு

**D) கனிஷ்கர்**

**விளக்கம்: குஷாணர்களில் புகழ் பெற்றவர் கனிஷ்கர், பௌத்தத்தின் மகாயானப் பிரிவை இவர் ஆர்வமுடன் பின்பற்றினார். இவரது காலத்தில்தான் காந்தாரக் கலை வளர்ச்சி பெற்றது.**

84. வழக்கமான தூதர்கள் மற்றும் கடிதப் பரிமாற்றம்___________

A) இந்தியாவிலிருந்து மேற்குக்கான வழக்கமான வணிகத்தைப் பாதித்தது.

**B) இந்தியாவிலிருந்து மேற்குக்கு வழக்கமான வணிகத்திற்கு உதவியது.**

C) இந்தியாவிலிருந்து கிழக்குக்கு வழக்கமான வணிகத்திற்கு உதவியது.

D) மேற்கூறிய எதுவுமில்லை.

85. குஷாண நாணயங்கள்___________நாணயங்களைவிட உயர்ந்த தரத்தில் இருந்தன.

A) ரோமானிய

**B) கிரேக்க**

C) குப்த

D) சாதவாகன

86. இந்தோ – கிரேக்கக் கலை மற்றும் சிற்பப் பணி_______என்று குறிப்பிடப்பட்டது.

A) மதுரா கலை

**B) காந்தாரக் கலை**

C) பாக் கலை

D) பாலா கலை

87. கீழ்க்கண்டவற்றுள் பொருத்தமற்றது எது?

A) புத்தசரிதம் – அஸ்வகோஷர்

**B) எரித்ரியக் கடலின் பெரிப்ளஸ் – மெகஸ்தனிஸ்**

C) அர்த்தசாஸ்திரம் – கௌடில்யர்

D) காமசூத்திரம் – வாத்சாயனர்

88. சக சத்ரப்களில் மிகவும் புகழ் பெற்றவர்____________

A) மொக

**B) ருத்ரதாமன்**

C) அஸிலிஸ்

D) யசோவர்மன்

89. ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வணிகத்தின் தன்மைகள் பொது ஆண்டின் தொடக்கத்தில் மாறியதற்குக் காரணம்.

(i) பொ.ஆ.மு. கடைசி நூற்றாண்டின் முடிவில் மத்திய தரைக்கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோம் எழுச்சியுற்றது.

(ii) அரேபியக் கடலில் வீசும் பருவக் காற்றுகளின் காலமுறை இயல்புகள் பொ.ஆ. முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸால் கண்டுபிடிக்கப்பட்டது.

A) i சரி

B) ii சரி

**C) i ii இரண்டும் சரி**

D) i ii இரண்டும் தவறு

90. செலியுகஸ் நிகேடரால் தலைநகரம் பாடலிபுத்திரத்துக்கு__________தூதராக மெகஸ்தனிஸ் அனுப்பப்பட்டார்.

A) ரோமானிய

**B) கிரேக்க**

C) சீன

D) பிரிட்டிஷ்